Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 441/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | |
| பெயர். | - | ஏழுமலை | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | வினையத்தான் | சமயம் | - | |
| கிராமம் | - | டி.புதுப்பாளையம் | வயது | - | 45 |

10.09.2025

எதிரி ஆஜர். சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. இந்த விபத்தில் இறந்துபோன வினையத்தான் எனது அப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விபத்து 06.06.2016 அன்று நடந்தது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண்ணை புகாரில் தவறாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், விபத்தில் அடிச்ச வண்டிக்கு இன்சூரன்ஸ் இல்லாததால் இன்சூரன்ஸ் உள்ள வண்டியை அடிச்சவர்கள் தரப்பில் காண்பித்துவிட்டார்கள், பின்பு போலீசார் விசாரித்து சரியான வண்டியை கேஸ் போட்டார்கள்.

2. விபத்து ஏற்படுத்திய வண்டியை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் இல்லை. புகாரில் வண்டியில் எனது அப்பாவுடன் வடிவேல் சென்றதாக சொல்லாமல், நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, புகாரில் காண்பித்துள்ளேன். புகாரை நான் எனது கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான், போலீசார் எழுதி கையெழுத்து போட சொன்னார்கள் போட்டேன்.

3. நான் வீட்டில் சாப்பிட்டு இருக்கும் போது சத்தம் கேட்டு அங்கு போனேன் என்றால் வீட்டில் வந்து தகவல் சொன்னார்கள் போனேன். நான் போன போது ஆஜர் எதிரியும் அங்கு அடிப்பட்டு இருந்தார், எங்க அப்பாவும் அடிப்பட்டு இருந்தார். விபத்து நடந்த இடத்திற்கு அருகில் வீடுகள் எதுவும் இல்லை, இருட்டான இடம், பச்சையம்மன் கோவில் இருந்தது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

4. புகார் கொடுக்க காவல் நிலையம் சென்ற போது என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் பாபு, செல்வம், சுப்பிரமணி, வடிவேல் ஆகியோர்கள் வந்தார்கள். நான் விபத்து நடந்ததை நேரடியாக பார்க்கவில்லை என்றும், கேள்வி பட்டு சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றும், விபத்து நஷ்ட ஈடு கோருவதற்காக சம்பவத்தை நேரடியாக பார்த்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. விபத்து ஏற்படுத்தியது அடையாளம் தெரியாத வண்டி என்றும், ஆஜர் எதிரி தான் மோதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ஆஜர் எதிரியும், அவரது அப்பாவும் ஆள் பலம், பண பலம் உள்ளவர்கள், நான் போன போது அதை வைத்து வண்டியை மாற்றிவிட்டார்கள். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் வண்டியை மாற்றிவிட்டார்கள், தற்போது நஷ்ட ஈடிற்காக என்று மாற்றி சொல்கிறார்கள்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 441/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | |
| பெயர். | - | செல்வம் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | அய்யனார் | சமயம் | - | |
| கிராமம் | - | டி.புதுப்பாளையம் | வயது | - | 31 |

10.09.2025

எதிரி ஆஜர். சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விபத்தில் இறந்தவர் எனது தாத்தா. விபத்து நடந்த விவரத்தை பாஸ்கர் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார், அதன் பிறகு நான் போனேன். போலீசார் விசாரணையில் வண்டியில் எனது தாத்தாவுடன் வடிவேல் சென்றதாக சொல்லாமல், நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, நான் போலீசார் விசாரித்த போது சொன்னேன், அவர்கள் எழுதினார்களா, இல்லையா என்று எனக்கு தெரியாது.

2. விபத்து ஏற்படுத்திய வண்டியை பார்த்தேனா, அதனுடைய நெம்பர் தெரியுமா என்றால் 7 வருடம் ஆகிவிட்டது தெரியவில்லை, ஆனால் வண்டிக்கு இன்சூரன்ஸ் இல்லாததால் வண்டியை மாற்றிவிட்டார்கள், நாங்கள் பிரச்சனை செய்ததால் சரியான வண்டியை போட்டார்கள். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. விபத்து நடந்த இடம் இருட்டான இடம், வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியது அடையாளம் தெரியாத வண்டி என்றும், ஆஜர் எதிரி தான் மோதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை, அப்படியிருந்தால் ஆஜர் எதிரி ஏன் அங்கு வந்து விழுந்தார் என்று சாட்சி கேட்கிறார். சாட்சிகள் ஏழுமலை மற்றும் பாபு எனது உறவினர்கள் என்றால் சரிதான். சுப்பிரமணி எனக்கு உறவினர் அல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 441/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | |
| பெயர். | - | பாபு | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | சீனிவாசன் | சமயம் | - | |
| கிராமம் | - | டி.புதுப்பாளையம் | வயது | - | 56 |

10.09.2025

எதிரி ஆஜர். சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விபத்தில் இறந்தவர் எனது மனைவிக்கு தாத்தா முறை, உறவினர் ஆனால் நெருங்கிய உறவு முறை அல்ல. சாட்சி ஏழுமலை எனது சின்னமாமனார், சாட்சி செல்வம் எனது மச்சான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 441/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | |
| பெயர். | - | சுப்பிரமணியன் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | அம்மாசி | சமயம் | - | |
| கிராமம் | - | டி.புதுப்பாளையம் | வயது | - | |

10.09.2025

எதிரி ஆஜர். சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது . போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சடலத்தை ஒப்படைப்பதற்காக ஊர்காரர் 4 பேரை கையெழுத்து போடச்சொன்னார்கள், நான் ஊர்க்காரர் என்ற முறையில் ஸ்டேசனில் வந்து கையெழுத்து போட்டேன், மற்றப்படி எனக்கு தெரியாது.

(Sd/-R.SenthilKumar)
D.M-cum-JM.
T.V.Nallur.